**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 21-07-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-07-21 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-07-22 | 2023-07-23 | 2023-07-24 | 2023-07-25 | 2023-07-26 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 3.0 | 4.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 37.0 | 36.0 | 36.0 | 34.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 27.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 65 | 70 | 65 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 50 | 60 | 55 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 12 | 12 | 12 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 270 | 270 | 270 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 6 | 6 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஜுலை 24,25 மற்றும் 26ஆகிய தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34.0°C- 37.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 25.0°C- 27.0°C இருக்கும். பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 08 -12 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

கொய்யாவில் மாவுப் பூச்சி, மேலாண்மை தையோமெதாக்சம் 0.5 கிராம்/லிட் அல்லது ட்ரையோசோபாஸ் 2 மிலி+ வேப்ப எண்ணெய் 5 மிலி/1, போசலோன் 35 இசி 1.5 மிலி+ வேப்ப எண்ணெய் 5 மிலி/லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

## குறுஞ்செய்தி :

நிலவும் வானிலையை பயன்படுத்தி 18 நாட்களுக்கு மேலானதக்காளி நாற்றங்காலுக்கு நீரில் கரையக்கூடிய 19:19:19 :உரத்தினை 5 கிராம் / 1லிட்டர் என்ற விகிதத்தில் நீரில் கலந்து ஊற்றவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மக்காச்சோளம் | ஆடிப்பட்டம் இறையில் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் இமிடாகுளோபிரிட் 70 WS மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும். |
| நெல் | நெற்பயிரில் இலை சுருட்டுட் ப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த பிப்ரோரினில் 2 மி.லி /லிட்டட் ர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெண்டை/ லேடிஸின் விரல் | வெண்டையை தாக்கும் நரம்புத் தேமல் நோய் நிர்வாகத்திற்கு, அசாடிராக்டின் 0.03 WSP @ 5 கிராம் /10 லி (அல்லது) தையோமெதொக்சாம் 25WG @ 2 கிராம் /லி தெளிக்கவும் மேலும் 15 நாட்களுக்குப்பிறகு மீண்டும் ஒரு முறை தெளிக்கவும். |
| தென்னை | நிகழும் வானிலையின் காரணமாக தஞ்சாவூர் வாடல்நோய் நோய் வர ஏதுவாக உள்ளது. ஜூலை முதல் நவம்பர் மாதத்தில் இந்த நோய் வேகமாக பரவுகிறது. ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொடங்கி விடுதல்ஆகியவற்றுடன் தொடங்குகிறது .அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து அது மேல் நோக்கி பரவும். கசியும் பகுதியில் உள்ள திசுக்கள் மென்மையாக இருக்கும். சாறு கசியும் பகுதியில் உள்ள திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும். இதனைக் கட்டுபடுத்த 2 மி.லி ஹெக்சகோனோசோல் உடன் 100 மிலி தண்ணீர் கலந்து வேர்மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை ) செலுத்தலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கறவைமாடுகளின் பால் உற்பத்தியை நிலைப்படுத்த மாடுகளுக்கு தீவனம் அளிப்பதில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். கறவை மாடுகளின் தீவனத்தில் மாறுபாடு ஏற்படும் போது உடனே பால் அளவும் குறையும். எனவே மாடுகள் நிறைய பசுதீவனம் உட்கொள்ளுமளவு உலர் தீவனம் மற்றும் வைக்கோலினை அளிக்கலாம். 2.5 லிட்டருக்கு மேல் கறக்கும் மாடுகளுக்கு ஒவ்வரு 2 லிட்டருக்கு 1 கிலோ கலப்புத் தீவனம் கட்டாயம் அளிக்க வேண்டும். கலப்புத் தீவனம் பால் கறக்கும் முன்பு அடர் தீவனம் பால் கறந்தபின் அளித்தல் சிறந்த பலனை கொடுக்கும். |